# *Friday Sermon/* வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

*(07 July 2017/ 12 Shawwal 1438 Hijira)*

# THE DEATH OF JESUS (AS)

## இயேசுவின் அல்லது ஈசா நபி(அலை) மின் மரணம்



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

ஸலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

"முஹம்மது ஒரு இறைத்தூதரைத் தவிர வேறு எவருமில்லை. அவருக்கு முன் தூதர்கள் சென்றுவிட்டனர். அவ்வாறே அவரும் இறந்துவிட்டால் அல்லது கொல்லப்பட்டுவிட்டால் வந்த வழியில் திரும்பி விடுவீர்களா? வந்த வழியே திரும்புவோர் அல்லாஹ்வுக்கு எந்தக்கேடும் செய்யவே முடியாது நன்றியுடன் நடப்போருக்கு அல்லாஹ் கூலி வழங்குவான்" (3 – 145)

உஹத்போர் வேளையில், தூய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கொலைச் செய்யப்பட்டார் என்ற ஒரு தவறான செய்தி எங்கும் பரவலாகியது. இந்த நிகழ்வைக் குறித்து மேல் கூறிய இவ்வசனம் மறைமுகமாக குறிப்பிடுகின்றது உண்மையில் இவ்வகையில் நிகழ்ந்தால் கூட நம்பிக்கையாளர்கள் அவர்களின் நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்லாமலிருக்க வேண்டும். ஏனெனில் இதற்கு முன் தோன்றிய அனைத்து இறைத்தூதர்களும் மரணமடைந்துவிட்டனர். அதைப் போன்று அன்னாரும் மரணித்துக் கொள்பவராகவே இருக்கின்றார். ஆனால் இஸ்லாமின் இறைவன் ஏகனும் எல்லாம் வல்ல இறைவனாகவும் இருக்கின்றான். அவன் என்றென்றும் வாழ்ந்திருப்பவனாவான்.




**Model Track of Jesus (as) from Israel to India**

## First Proof

## முதலாவது சான்று



**Sepulchre of Jesus(as) dweller Kashmir**

உஹத்போரின்போது நிகழ்ந்த இந்த தவறான செய்திக்குப்பிறகு 7 வருடங்கள் கூட தாண்டியப்பின் தூய தூதர்(ஸல்) அவர்கள் வபாத்தாகி விட்டார். அவ்வேளையில் ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் மதீனா பள்ளி வாயிலில் இருந்திருந்தார். அன்னாரின் கரங்களில் வாளும் இருந்தது. பின்னர் அன்னார் கூறிக் கொண்டார் **"அல்லாஹ்வின் தூதர் இறந்தார் என கூறிக் கொள்பவர்களின் தலையை நான் சீகிவிடுவேன் அன்னார் மரணித்து விடவில்லை. மாறாக முஸா(அலை) அவர்கள் தம் இறைவனின் அருகாமையில் சென்றது போன்று அன்னாரும் தம் இறைவனின் அருகாமையில் சென்றிருக்கின்றார். நயவஞ்சகர்களை தண்டிப்பதற்காக அன்னார் திரும்ப வந்துவிடுவார்."**

அந்நேரம் அதாவது தூதுவ அரசன்(ஸல்) அவர்கள் வபாத்தான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள் அங்கு இல்லாமலிருந்தார். செய்தி கிடைத்தபோது அன்னார் விரைவில் வந்தடைந்தார். தூதர்(ஸல்)வின் அறையின் பால் நுழைந்தார். திருநபி(ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டதாக அன்னார் உணர்ந்தார். பின்னர் திருநபி(ஸல்) அவர்களின் நெற்றியில் முத்தமிட்டுக்கொண்ட பிறகு அன்னார் கூறினார். **“நீங்கள் வாழ்ந்திருந்த போது பரிசுத்தராகயிருந்தது போன்று மரணித்த போதும் பரிசுத்தராகவேயிருக்கின்றீர்கள். நிச்சயமாகவும் அல்லாஹ் இரண்டு மரணத்தை உங்களுக்கு வழங்கமாட்டான்”** அதற்கு பின் அன்னார் மனைக்கு வெளியே வந்தார். பின்னர் ஒரு தீர்மானத்தில் எட்டினார். பள்ளிவாயிலில் ஒன்று கூடியவர்களிடம் அன்னார் கூறினார் **“உங்களில் எவராவது முஹம்மதை வணங்கியிருந்தால் அவர்கள் உணர்ந்துக் கொள்ளட்டும், முஹம்மது இதோ இறந்துவிட்டிருக்கின்றார். ஆனால் எவர் ஒருவர் இறைவனை வணங்கியிருந்தீர்கள் அவர்கள் உணர்ந்துக் கொள்ளட்டும் இறைவன் என்றென்றும் வாழ்ந்திருப்பவன் என்றும், அவன் ஒருபோதும் மரணிப்பவனல்ல என்றும் (புரிந்து கொள்ளட்டும்)”** மேலும் அவர்களின் முன் இந்த வசனத்தை ஓதிக்காட்டினார். **“முஹம்மது ஒரு இறைத்தூதரைத் தவிர வேறு எவருமில்லை. அவருக்கு முன் வாழ்ந்திருந்த தூதர்கள் யாவரும் இறந்துவிட்டனர்”.**

**“முஹம்மது ஒரு இறைத்தூதரை தவிர வேறு எவருமல்ல. அவருக்கு முன் தூதர்கள் சென்று விட்டனர் (இறந்து விட்டனர்). அவ்வாறே அவரும் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டுவிட்டால் வந்த வழியில் திரும்பி விடுவீர்களா? வந்த வழியே திரும்புவோர் அல்லாஹ்வுக்கு எந்தக் கேடும் செய்யவே இயலாது. நன்றியுடன் நடப்போருக்கு அல்லாஹ் கூலி வழங்குவான்”** (3 – 145)

பரிசுத்த தூதர்(ஸல்) அவர்களின் மரணம் ஒரு அற்புதம் வாய்ந்த விஷயமொன்றுமல்ல. அன்னாருக்கு முன்பு வாழ்ந்திருந்த தூதர்கள் இறந்துவிட்டனர். அதைப் போன்று அன்னாரும் இறந்திருக்கின்றார். முற்றிலும் அதற்கு உகுந்த முறையிலான குர்-ஆன் வசனத்திற்கு செவி சாய்த்தபின் உமர்(ரலி) அவர்களும் உடனிருந்தவர்களும் ரசூல்(ஸல்) வபாத்தாகி விட்டார் என்ற உண்மையை உணர்ந்துக் கொண்டனர். பின்னர் அவர்கள் யாவும் கவலைக்குரியவர்களாகி விடவும் செய்தனர். இந்த வசனம் முஹம்மது(ஸல்)வுக்கு முன்பு வாழ்ந்திருந்த அனைத்து இறை தூதர்களின் மரணத்தையும் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகின்றது. மட்டுமின்றி எவராவது வாழ்ந்திருக்கின்றார்கள் என்றால் அவ்விஷயத்தை இந்த குர்-ஆன் வசனம் வாயிலாக கூறப்பட்டிருந்திருக்கும். மாறாக இந்த வசனம் முன்பு வாழ்ந்திருந்த இறைத்தூதர்களின் மரணத்தை உறுதிப்படுத்திக் கொண்வதோடு தூய தூதர்(ஸல்)வின் வபாத்தையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றது.

# Second Proof

## இரண்டாவது சான்று

**"மர்யமின் மகன் மஸீஹ் தூதரைத் தவிர வேறில்லை. அவருக்கு முன் பல தூதர்களும் சென்று விட்டனர் (இறந்து விட்டனர்) அவரது தாய் உண்மையாளர். அவ்விருவரும் உணவு உண்போராக இருந்தனர். அவர்களுக்குச் சான்றுகளை எவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளோம் என்பதைச் சிந்திப்பீராக! பின்னர் எவ்வாறு திசை திருப்பப்படுகின்றனர் என்பதையும் சிந்திப்பீராக!** (5: 76)

இந்த வசனம் உறுதிப்படுத்திக் கொள்வதாவது, இயேசுவுக்கு(ஈசா நபி) முன்பு வாழ்ந்திருந்த அனைத்து இறைத்தூதர்களும் மரணித்து விட்டனர் என்றாகும். இவ்விஷயம் முஸ்லீம்கள் ஒத்துக் கொள்ள வேண்டியதாகும். இதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அதே வார்த்தைகளையாகும் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) விஷயத்திலும் பயன்படுத்தப்பட்டிருப்பது. பின்னர் ஏன் அன்னாருக்கு முன்பு வாழ்ந்திருந்த ஒரு இறைத்தூதர் மட்டும் இன்று வரையிலும் மரணிக்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்? நான் எடுத்துரைத்த இந்த இரண்டு வசனங்களுடையவும் கருத்து ஒன்றேயாகும். அவை இரண்டும் ஒரே விஷயத்தையேதான் பொருளாக்கிக் கொள்கின்றது. மேலும் அந்த வசனம் வாயிலாக மற்றொரு விஷயத்தை இறைவன் நமக்கு கற்பித்துக் கொள்கின்றான். அது என்னவென்றால், இப்பூமியில் நிலை நிற்பதற்காக அவர்கள் இரண்டு பேரும் (ஈசா நபியும் அன்னாரின் தாயும்) உணவு உண்போராகயிருந்தனர் (5 : 76)

அதாவது இதைக் கொண்டு அர்த்தமாக்கி கொள்வது இயேசுவும் அன்னாரின் தாயாரும் மனிதர்களாகயிருந்தனர். அவர்கள் இருவரிலும் இறையம்சம் ஒன்றும் இருந்ததில்லை. சொர்க்கத்தின் பால் ஏறிச்சென்றிட ஆன்மீக உடலெதுவும் இருந்ததில்லை. மனிதர்களைப் பொறுத்தவரையில் உடலைக் கொண்டு ஆன்மாவை அலங்காரப்படுத்தி, இப்பூமியில் வாழ்ந்துக் கொள்வதற்கு உகுந்த முறையில் வடிவமைத்து, மனிதனை இறைவன் படைத்திருக்கின்றான். இந்த பௌதீக உடல்களில் ஆன்மா வாழும் காலம் வரையிலும் அதாவது மண்ணைக் கொண்டு படைக்கப்பட்டிருக்கும் இந்த உடலுடன் இருக்கும் நேரம் வரையிலும் இப்படியே எவரும் சொர்க்கத்தின் பால் ஏறிச்செல்லவோ அங்கு வசித்துக் கொள்ளவோ ஒரு பொழுதும் ஆகாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் ஆன்மாவுக்கு பயணம் செய்ய முடியும். ஆனால் அவரது பௌதீகமான உடல் எப்பொழுதும் இப்பூமியிலேயே இருக்கும். மூன்று சூழ்நிலைகளில் இவ்வகையிலான ஆன்மீக பயணம் நிகழ்கின்றது.

**(1) During Sleep (2) During revelation and inspirations, and (3) That which is final, that is, death.**

### 1. தூங்கும் நேரத்தில்

2. வெளிப்பாடுகளும், தரிசனங்களும் பெற்றுக் கொள்ளும் நேரத்தில்
3. இறுதி பயணம் அல்லது மரணம் நிகழும் நேரத்தில்

இவ்வகையிலான எந்த சூழ்நிலையிலானாலும் சரி, பூமியுமாக தொடர்புடைய பௌதீக உடல் இப்பூமியிலேயே நிலைநிற்கும். எந்த முறையிலானாலும் சரி பூமியில் தான் அந்த உடலை மறைவு செய்யப்படுகின்றது. பௌதீகமான அந்த உடலை ஆகாயத்தின் பாலோ சொர்க்கத்தின் பாலோ உயர்த்திக் கொள்ளவும் ஆகாது.

## Third Proof

## மூன்றாவது சான்று

**உணவு உட்கொள்ளாத உடலாக அவர்களை நாம் படைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் நிரந்தரமாக (வாழ்ந்துக் கொள்பவராகவும்) இருக்கவில்லை.** (21 : 9)

அதாவது அவர்களின் உடல் மற்றும் மனிதர்களின் உடலைப் போன்றாகும். அவர்களின் வயது வரம்பும் அதைப் போன்றேயாகும். அவர்களுக்கு எந்த முன்னுரிமையும் இருந்ததில்லை. மாறாக மற்று மனிதர்களைப் போன்று மரணம் வாயிலாகவே அவர்களும் இறைவனிடத்தில் சென்றடைந்தனர்.

எனது சகோதரி சகோதரர்களே! கவனித்துக் கொள்ளுங்கள். ஈசா(அலை) வாழ்ந்திருக்கின்றார் என்றும் நம் தூய தூதர் முஹம்மது (ஸல்) இறந்துவிட்டார் என்றும் உள்ள கருத்துடன் வாழ்ந்துக் கொள்வோர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மிக பெரிய இறை கோபத்திற்கு ஆளாகி விடுவார்கள் என்பதை உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

**“(முஹம்மதே) உமக்கு முன் எந்த மனிதருக்கும் நாம் நிரந்தரத்தை ஏற்படுத்தவில்லை. நீர் மரணித்து விட்டால் அவர்கள் நிலையாக இருப்பவர்களா? ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைப்பவராகவே இருக்கின்றனர். நன்மை தீமையின் மூலம் பரீட்சித்துப் பார்ப்பதற்காக உங்களைச் சோதிப்போம். நம்மிடமே திரும்ப கொண்டுவரப்படுவீர்கள்”** (21 : 35 – 36)

பித் அத்தின் ஆள்களின் நிலை மிக பரிதாபம் ஆகும். அறிவற்ற அவர்களின் முரீதுகளின் நிலையும் அவ்வாறேயாகும். அவர்கள் முஹம்மது(ஸல்) வை நேசிக்கின்றார்கள் என உரிமை கோருகின்றார்கள். ஆனால் அவர்களின் நம்பிக்கை கிறிஸ்தவ நம்பிக்கையைப் போன்றாகும். முஸ்லீம்களின் அறியாமை மூலம் பெரும்பாலானோரும் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டிருப்பது இக்காரணத்தாலாகும் ஆனால் இந்த பித்-அத்தின் ஆள்களுக்கு இது ஒரு விஷயமே அல்ல!

நீங்கள் உங்களின் கண்களை திறந்துக் கொள்ளுங்கள். ஏய் எனது சகோதரி-சகோதரர்களே! ஈச(அலை) ஆகாயத்தில் வாழ்ந்திருக்கின்றார் என்றும்

நம் மகானான தூதர் முஹம்மது(ஸல்) இங்கு பூமியில் மறையடைக்கப் பட்டிருக்கின்றார் என்றும் ஆன நம்பிக்கை வழிகேடாகும். இந்த உலமாக்களின் வழி கேடிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாத்துக் கொள்வானாக! அவர்கள் முஸ்லீம்களை நிரந்தரமான நரகத்தின் பால் கொண்டு செல்கின்றார்கள்! ஆமீன்.


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817




Tamil Translator Azim Ahmad with Hazrat Khalifathullah Munir Ahmad Azim (as)